அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

வாய்க்காலைத் தூர் வாருதல்

***1408—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், பாக்கம்பாடி அணைக்கட்டிலிருந்து செல்லும் வரத்து வாய்க்காலைத் தூர்வார அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், பெரியேரி கிராமத்தின் அருகே வசிஷ்டா நதியின் குறுக்கே அமைந்துள்ள பாக்கம்பாடி அணைக்கட்டிலிருந்து செல்லும் வாய்க்கால்கள், பாக்கம்பாடி ஏரி வரை செல்கின்றன. அனைத்து கிராம ஏரி வாய்க்கால்களையும் முன்னுரிமை அடிப்படையில், ஆண்டுப் பராமரிப்பு பணிகள்மூலம் மதிப்பீடு தயார் செய்து, தூர் வாரி பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

2023 ஏப்ரல் 6]

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்களது கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), சேலம் மாவட்டம், பெரியேரி ஊராட்சியில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், வசிஷ்டா நதியின் குறுக்கே சுமார் ரூ.11 கோடி மதிப்பீட்டில் பாக்கம்பாடி அணைக்கட்டு கட்டப்பட்டது. இந்த அணைக்கட்டின்மூலம் 25 ஏரிகளின் வாய்க்கால்கள்மூலம் சுமார் 2,750 ஏக்கர் நிலங்கள் நேரடி நீர்ப் பாசனம் பெறுகின்றன. மேலும், நீர்வரத்து வாய்க்கால்கள் மற்றும் 25 ஏரிகளில் தேங்கியுள்ள நீரினால், அருகிலுள்ள ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளின் நீர்மட்டம் உயர்கின்றது. இதன்மூலம் சுமார் மூன்றாயிரம் ஏக்கர் நிலங்கள் நீர்ப் பாசனம் பெறுகின்றன. இந்த அணைக்கட்டில், 16 ஏரிகள், கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சார்ந்தவை. 9 ஏரிகள், கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவை. கடந்த நிதியாண்டில், இந்த அணைக்கட்டைப் பராமரிக்க ரூ.9.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியின்மூலம் அணைக்கட்டு பராமரிப்பு மற்றும் 3 ஏரிகளுக்கு நீர்வரத்து வாய்க்கால்கள் பராமரிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. போதிய நிதி இல்லாத காரணத்தால் மீதமுள்ள ஏரிகளின் நீர்வரத்து வாய்க்கால்கள் தூர் வாரப்படவில்லை. மீதமுள்ள 22 ஏரிகளின் நீர்வரத்து வாய்க்கால்களைத் தூர்வார சுமார் ரூ.65 இலட்சம் நிதி ஒதுக்கி தூர்வார வழிவகை செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாக்கம்பாடி அணைக்கட்டு shutter மற்றும் 25 ஏரிகளின் மதகு shutter–களைப் புனரமைக்க சுமார் ரூ.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியையும் ஒதுக்கித் தர, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டியதை எல்லாம் அவரே சொல்லிவிட்டார். இதிலே நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. ஒரே ஒரு வரி சொல்லலாம். 22 கால்வாய்களைத்

தூர்வார வேண்டியுள்ளது. இந்த வருடம் அதற்கு ரூ.90 இலட்சம் செலவு ஆகும், maintenance-ல் செய்வதற்கு; I will try.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

முற்பகல் 10–05

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 5 அணைக்கட்டுகள் அறிவிக்கப்பட்டன. குறிப்பாக, எனது தொகுதியில், கோமுகி நதியின் குறுக்கே, வரஞ்சிரத்தில் ஓர் அணைக்கட்டும், மணிமுத்தாறு நதியின் குறுக்கே, வீரசோழபுரத்தில் ஓர் அணைக்கட்டும், மயூரா நதியின் குறுக்கே, நயினார்பாளையத்தில் ஓர் அணைக்கட்டும் அறிவிக்கப்பட்டன. இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துள்ளது என கண்டறியப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அணைக்கட்டுகளை உடனடியாகக் கட்டித் தர ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

கழிவு நீரகற்று நிலையம்

***24419—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, வடபழனி அழகிரி நகரில், கழிவு நீரகற்று நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*